ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 1996/29 - 2016 දෙසැම්බර් මස 06 වැනි අඟහරුවාදා - 2016.12.06

1996/29 ஆம் இலக்கம் - 2016 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 06 ஆந் திகதி செவ்வாய்க்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

## பகுதி III - காணிகள்

### காணி கொள்வனவு பற்றிய அறிவித்தல்கள்

**காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)**

7 ஆம் பிரிவின் கீழான அறிவித்தல்

எனது இல.: நுவ/3/1/8/கா.எ/160.
காணி அமைச்சின் இல.:4-3/10/2013/யுடிஏ/639.

ஒரு பகிரங்கத் தேவைக்கு வேண்டியதான கீழ்க் காணும் காணித் துண்டுகளை எடுத்துக்கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிறார்கள் என்பதை 1964 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க காணி எடுத்தல் (திருத்தச்) சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான காணி எடுத்தற் சட்டத்தின் (அத்தியாயம் 460) 7 ஆம் பிரிவின் (1) ஆம் உட் பிரிவின் பிரகாரம் நான் இத்தால் அறிவிக்கின்றேன்.

**எடுத்துக் கொள்ளவிருக்கும் காணியின் விபரம்:**

மத்திய மாகாணத்தில் நுவரெலியா மாவட்டத்தில் நுவரெலியா பிரதேச செயலாளர் பிரிவில், ஒய பளாத கோரளை சிறு பிரிவில், நுவரெலியா (பிரிவு இல. 7 - பாக் ரோட், நுவரெலியா மாநகர சபை எல்லைக்குள்) கிராமத்தில் அமைந்துள்ள, நில அளவையாளர் நாயகத்தினால் தயாரிக்கப்பட்ட பி. பி. நு. 1840 ஆம் இலக்கம் கொண்டதும் 2016.11.02 ஆந் திகதியிடப்பட்ட ஆரம்ப வரைபடத்தில் காட்டப்பட்ட மொத்த அளவின் 5.9181 ஹெக்டயார் கொண்ட காணித் துண்டுகளின் விபரம்:

**1. துண்டு இல. 01**

காணியின் பெயர்: ஓக்லி கொட்டேஜ்; விபரம்: வீட்டுத் தோட்டம், 20 - 100 வருடங்கள் வயதான சய்பிரஸ் மரங்கள் 10, 35 - 85 வருடங்கள் வயதான சய்பிரஸ் மரங்கள் 132, 40 - 80 வருடங்கள் வயதான ரர்பன்ரயின் மரங்கள் 9, 30 - 70 வருடங்கள் வயதான இந்திய பாலைவன மரங்கள் 39; உரிமை கோருவோர்: கெல்சி புரோபட்டி டெவலப்பர்ஸ் பிறைவேட் லிமிடட், டுனைமிஸ் கப்பிட்டல் பி. எல். சி. மற்றும் நெக்ஸ் வென்சஸ் லிமிடட்; விஸ்தீரணம்: 5.2639 ஹெக்டயார்.

**2. துண்டு இல. 02**

காணியின் பெயர்: ஓக்லி கொட்டேஜ்; விபரம்: வீட்டுத் தோட்டம், 20 வருடங்கள் வயதான சய்பிரஸ் மரம் 01, 35 வருடங்கள் வயதான அக்கேஸியா மரங்கள் 03, 30 வருடங்கள் வயதான ரர்பன்ரயின் மரங்கள் 9, 30 வருடங்கள் வயதான இந்திய பாலைவன மரங்கள் 33; உரிமை கோருவோர்: கெல்சி புரோபட்டி டெவலப்பர்ஸ் பிறைவேட் லிமிடட், டுனைமிஸ் கப்பிட்டல் பி. எல். சி. மற்றும் நெக்ஸ் வென்சஸ் லிமிடட்; விஸ்தீரணம்: 0.6542 ஹெக்டயார்.

மேற்குறித்த காணித் துண்டுகளுக்கு உரித்துப் பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது முறைப்படி எழுத்து மூலம் அதிகாரமளிக்கப்பட்ட காரியக்காரர் மூலமாக 2017 ஆம் ஆண்டு சனவரி மாதம் 03 ஆம் திகதி மு.ப. 11.00 மணிக்கு, நுவரெலியா பிரதேச செயலகத்தில் என்முன் தோன்றும் படியும், அக் காணியில் அவர்களுக்குள்ள உடந்தைகளின் தன்மையையும் குறித்த காணித் துண்டுகளை எடுத்ததற்கான நட்டஈடு பற்றிய அவர்களின் கோரிக்கைகளின் விபரங் களையும், நட்டஈட்டுத் தொகையையும் அத்தொகை கணிக்கப்பட்ட விபரங்களையும் 2016 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 28 ஆம் திகதிக்கு முன்னர் எழுத்தில் முப்பிரதிகளாக எனக்கு அறிவிக்கும்படியும் இத்தால் கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

எஸ்.பி.கே. போதிமான்ன,
பிரதேச செயலாளர்,
நுவரெலியா.

பிரதேச செயலகம்,
நுவரெலியா,
2016, திசெம்பர் 05.

12 - 859

*இவ்வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*